**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr.P.C.**)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

| | | |
|---|---|---|
| Calendars<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | } | Case No. CC 255 of 2025 |

Depositions of PW -1 witness for ________ { Prosecution / Defence / Court

Name : திரு.**ஹரிச்சந்திரன்**

Father's Name : த/பெ. **குப்பன்**

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th **day of March** 2026.

**(எதிரி ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

நான் தற்போது செந்தாம்பாளையத்தில் குடியிருந்து கொண்டு ஓட்டுநராக வேலை பார்த்து வருகிறேன். இவ்வழக்கு சம்பவத்தில் இறந்துபோன குப்பன் என்னுடைய அப்பா. தேதி மாதம் வருடம் ஞாபகம் இல்லை. 6,7 வருடங்களுக்கு முன்பாக நான் வேலையில் இருந்தபோது எனது தம்பி சிவகிரி மதிய வேலையில் தொலைபேசியில் அழைத்து என் அப்பாவிற்கு விபத்து ஏற்பட்டதாக தெரிவித்ததின் பேரில் காடு வெட்டிபாளையம் சென்று பார்த்தபோது தலையில் பலத்த காயமும் கைகளிலும் காயம் ஏறப்பட்டு இறந்திருந்தார். பின்னர் தனியார் ஆம்புலன்ஸ் மூலமாக எனது தந்தையை கோவை அரசு மருத்துவமனைக்கு எடுத்து சென்றோம். சம்பவம் குறித்து விசாரித்தபோது எனது அப்பா எக்ஸல் இருசக்கர வானம் சென்றபோது பிக்கப் வாகனம் மோதி விபத்து எற்பட்டதாக தெரிந்தது கொண்டேன். பின்னர் காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். அந்த புகார் மனு **அ.சா.ஆ** 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என் அப்பாவின் பிரேதத்தின் மீது போலிசார் பிரேத விசாரணையின் போத உடனிருந்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. எந்த தேதி காவல் நிலையத்தில் புகார் அளித்தேன் என நாள் எனக்கு தற்பொழுது ஞாபகம் இல்லை. நான் காவல் நிலையத்தில் புகார் அளிக்க சென்ற பொழுது என்னுடன் சிவகிரி, சரவணன்,முருகன் ஆகியோர்கள் வந்தார்கள். புகாரை நான் தான் எழுதினேன். புகாரை போலீசார் சொல்ல சொல்ல நான் எழுதினேன் என்றால் சரியல்ல நானாகத்தான் எழுதினேன். விபத்து குறித்து எனக்கு சிவகிரி தகவல் அளித்தார். மதியம் சுமார் 1 முதல் 2 மணிக்குள்ளாக எனக்கு தகவல் சொன்னார். சிவகிரி அப்பொழுது எங்கு இருந்தார் என எனக்கு தெரியாது. சிவகிரிக்கு யார் தகவல் சொன்னார்கள் என்றால் யார் தகவல் சொன்னார்கள் என்று எனக்கு தெரியாது போன் மூலமாக சிவகிரிக்கு தகவல் சொல்லி உள்ளார்கள். அதன் பின்னிட்டு சிவகிரி எனக்கு தகவல் சொன்னார் என்றால் சரிதான். அதன் பின்னிட்டு நான் சிவகிரி காவல் நிலையம் சென்றோம் என்றால் சரிதான். தகவல் சொன்னவுடன் நானும் சென்றேன் பின்னர் சம்பவ இடத்திலிருந்து சிவகிரி நானும் காவல் நிலையம் சென்றோம்.

2. சிவகிரிக்கு யார் தகவல் சொன்னார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. சிவகிரி சம்பவ இடத்திற்கு எனக்கு முன்பாகவே சென்று விட்டார். சிவகிரி எனக்கு தகவல் வேறு எந்த விபரம் சொன்னதில்லை என்றால் அடிபட்டு கீழே விழுந்து கிடப்பதாகவும் சொன்னார் வாகனம் மோதி விட்டதாகபும் சொன்னார். AMBULANCE மூலம் மருத்துவமனைக்கு அனுப்பினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாதென்றால் சரிதான். என்னை போலீசார் இவ்வழக்கு சம்பந்தமாக எத்தனை முறை விசாரித்தார்கள் என எனக்கு ஞாபகம் இல்லை. புகாரில் அன்றைய தினம் வாகனத்தின் பதிவு எண் எழுதிக் கொடுத்தேன் தற்பொழுது எனக்கு ஞாபகம் இல்லை. சம்பவ விபத்தானது எதிரியின் அஜாக்கிரதையால் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2026.03.12 18:39:29 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**